(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.
Case No. C.C. 371/2012

DEPOSITION OF WITNESS FOR PW.1

Name : R. RAMESHBABU S/O. RAJAGOPAL

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.07.18

***மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு மறு விசாரணை செய்யப்படுகிறது.***

***1 மற்றும் 2வது எதிரிகளிடமிருந்து சொத்து வாங்கினேன். நான் வாங்கிய சொத்தில் வழிப்பிரச்சினை இருந்ததால் வழிப்பிரச்சனைக்காக நானும் 1வது எதிரியும் 02.07.2012ல் வழக்கு சம்மந்தப்பட்ட சொத்திற்கான வழியினை பெற்றுத்தருவதாகவும் அவ்வாறு பெற்றுத்தரமுடியவில்லை எனில் 1வது எதிரியே வாங்கிக்கொள்வதாகவும் எங்களுக்குள் உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கை பு.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிரிதரப்பு வழக்கிறஞரால் புகார்தாரரே ஆவணத்தினை நீருபிக்க வேண்டும் மற்றும் நிரூபணத்திற்கு உட்படுத்தப்படவேண்டியது என்ற காரணத்தினால் ஆட்சேபணை செய்யப்பட்டது) 02.09.2012க்குள் அந்த உடன்படிக்கையை 1வது எதிரி நிறைவேற்றித்தருவதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.***

***குறுக்கு விசாரணை***

***வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.***